மே 8

# *புனித குயின்டின் (-287)*

இவர் இயேசுவை உருக்கமாக நேசித்தார். அவரது ஆட்சியை எங்கும் பரப்ப விரும்பினார். எனவே நாட்டையும் உலக மகிமைகளையும் விட்டு பிரான்ஸ் நாட்டுக்குச் சென்று வேதம் போதித்தார். செபம், தவ முயற்சிகள், உழைப்பு இவற்றால் அனேகரை மனந்திருப்பினார். கிறிஸ்தவ மறை விரைவாக பரவி வருதைக் கண்ட அஞ்ஞான அதிகாரி இவரைப் பிடித்து சிறையில் அடைத்து விலங்கிட்டு நயவஞ்சகமாக பேசினான். பயமுறுத்தினான்; இவரோ வேதத்தில் உறுதியாக இருந்தார். பலவிதமாக இவரை வதைத்தான். இவர் தையரித்துடனும் பொறுமையுடனும் வேதனைகளைச் சகித்தார். சூழ்ச்சியைக் கையாண்டு இவரது மனதை மாற்ற முயன்ற அதிகாரி தனது முயற்சிகள் பயனற்றுப் போவதைக் கண்டு அவன் அவரைக் கொல்ல உத்தரவிட்டான்.

**சிந்தனை:**

இயேசுவை நாம் நேசிக்கிறதாக சொல்லிக் கொள்கிறோம். அவருக்காக நாம் இதுவரை என்ன செய்திருக்கிறோம்.

**செபம்:**

ஆண்டவரே, உமது அரசு வருக.